# கடவுளின் சயனத்தை கலைக்கும் மணியோசை



காயத்திரி பப்ளிகேஷன்

நெடுந்தீவு - முகிலன்

# கடவுளின் சயனத்தை
# கலைக்கும் மணியோசை

நெடுந்தீவு - முகிலன்

வெளியீடு :

**காயத்திரி பப்ளிகேஷன்**

த. பெ. இல. : 64,
தெஹிவளை,
இலங்கை.

☎ 011 - 2727621

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கடவுளின் சயனத்தை கலைக்கும் மணியோசை |
| ஆசிரியர் | : | நெடுந்தீவு - முகிலன் |
| பதிப்புரிமை © | : | நெடுந்தீவு - முகிலன் |
| முதற்பதிப்பு | : | 2010 டிசெம்பர் |
| பக்கங்கள் | : | 104 |
| விலை | : | ரூ. 200 |
| வெளியீடு | : | காயத்திரி பப்ளிகேஷன்<br>த. பெ. இல. 64,<br>தெஹிவளை,<br>இலங்கை.<br>☎ 011 - 4981906, 011 - 2727621 |
| இ-மெயில் | : | navamohanv@yahoo.com |

**ஆக்கங்களுக்கும், கருத்துக்களுக்கும் நூலாசிரியரே முழுப்பொறுப்பு**

பதிப்பாசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி இப்புத்தகத்தின் எப்பகுதியையும் மறுபிரசுரம் செய்தலோ, போட்டோ பிரதி செய்தல் உட்பட இலத்திரனியல் அல்லது பொறியியல் சாதனத்தால் கையளித்தலோ தடை செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| TITLE OF THE BOOK | : | kadavulin sayanaththai kulaikkum maniosai |
| AUTHOR | : | Nedunthivu - Mukilan |
| COPYRIGHT © | : | Nedunthivu Mukilan |
| ISBN | : | 978-955-8741- 46 - 7 |
| FIRST EDITION | : | 2010 December |
| PAGES | : | 104 |
| PRICE | : | Rs. 200 |
| PUBLISHED BY | : | Gayathri Publication<br>P. O. Box 64,<br>Dehiwala,<br>Sri Lanka.<br>☎ 011 - 4981906, 011 - 4909043 |
| E- MAIL | : | navamohanv@yahoo.com |

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior permission of copyright owner.

புத்தகங்கள் உயிரோடு இருக்கின்றன !

எழுத்தாளர்கள் இறந்து விடுகிறார்கள் !

நம் சமூகம் பல வரலாறுகளைக்

கடந்து வந்ததோடு

பல சமூக விசுவாசிகளையும்

இழந்து விட்டது

இந்த வரிசையில்

மன்னாரின் மைந்தன்

மறைந்த பின்னும்

மக்களின் மனங்களில்

நின்று நிலைத்து நிற்கும்

சமூக விசுவாசி

சி. திருநாவுக்கரசு ஐயாவுக்கு

இது எனது காணிக்கை.

## ஓங்கி ஒலிக்கட்டும் மணியோசை

வாழ்த்துவதற்குரிய கர்வம் எனக்கில்லை
ஆயினும் வாழ்த்தத் தக்க தகுதி
இவர் சிந்தனையில் இருக்கக்
காண்கின்றேன்

இலங்கை வாழ் தமிழ் மக்கள் படும்
இன்னல்களை எடுத்துச்
சொல்ல வரலாற்றாளர்களுக்கு
வற்றிப் போய்விட்டது எண்ணம் !
வதங்கிப் போனது உள்ளம் !
ஆனால், கவிஞர்கள் கால தேவனின்
தூதர்களாய் நிலவரத்தைக்
கண்ணாடி போல் காட்டும்
ஆற்றல் கொண்டவர்கள்
தமிழன்னை பெற்ற பேறு

உள்ளத்தைக் கவ்வி
உணர்ச்சிகளில் உருக வைக்கும்
இவரது கவிதை வரிகளைத்
தொட்டுக் காட்டுவது
இங்கு பொருத்தமாக இருக்கும்

**நகரத்துப் பாட்டிகளே ! உங்கள்**
**பழைய சேலைகளைத் தாருங்கள்**
**கிராமத்திலே குமரிகள் இருக்கிறார்கள்**

நகரவாழ்வில் வாழ்கின்ற
சீமாட்டிகள் மட்டுமல்ல
நம் தமிழ்க் குமரிச் சிட்டுக்கள்
கிழிந்த சேலைகளை வாங்கிக்
கட்டக் கூட வழியின்றிக் கிடக்கின்றார்களே!

என்ற அவமானச் சேறு தெறித்து
படிப்பவர்களும் தான்
தலைகுனிய வேண்டியுள்ளது

**ஏழைகளின் வீட்டுக்கும் வாருங்கள்**
**விருந்தாளிகளே**
**பரிமாறுவதற்குத் தாராளமாய்**
**பசி இருக்கிறது**

...ம்ம்ம்... பசிக்குப் பசியை
விருந்து வைக்கக் காத்திருக்கும்
இலங்கைத் தமிழரின்
விருந்தோம்பல் கதி....

வயிறு எரிகிறதே

**புகைவண்டியின்**
**ஜன்னல் அருகில்**
**ஓர் அநாதை**
**போய் வருகிறேன் என்று**
**பூக்களுக்கே கைகாட்டுகிறான்**

தாய், தந்தை, உடன் பிறந்தார்,
உற்ற நண்பர்கள் என்று
எல்லோரையும்
பறி கொடுத்த பின்பு
தன்னந்தனியே யாருடன்
உறவு மனம் காட்ட முடியும்?
இந்த மென்மையான மலர்களைத் தவிர

கண்ணீர் மல்கிக் கசிகின்றது இதயம்...

**தலைவர்களின் சிலைகளில்**
**எச்சமிடுகின்றன**
**பிணங்களைத் தின்ற**
**காக்கைகள்**

நாம் செய்ய முடியாததை
அந்தக் காக்கைகள் செய்கின்றன
வாழ்க காக்கை இனம் என்று
வாழ்த்தத்தான் தோன்றுகிறது.

**குழந்தைகள் போல**
**மண் அள்ளித் தின்பதற்கும்**
**நம்மிடம் தானே**
**சொந்த நிலங்கள் இல்லை**

வாசகர்கள் எல்லோருக்குமே
இந்த வரிகள் - மறந்து
போகாது என்று நினைக்கிறேன்.

இந்த மணியோசை
தமிழர்களின்
கலக்கத்தை ஒழித்து
இறைவனின் சயனத்தைக்
கலைக்கும் மணியோசை என்பதால்
இதை எப்படி வாழ்த்த முடியும்?

மனுநீதிச் சோழன் கதையில்
தாய்ப்பசு தன் கன்றைக்
கொன்றவனின் தந்தையிடமே
கேட்ட மனுநீதியைப் போல்
தான் படைத்த ஓர் உயிரை
இன்னொரு உயிரைக் கொண்டு
அழிக்கச் செய்த அக்கிரமத்துக்கு
இறைநீதி கேட்கின்ற
கவி ஓசை இது.

**கிருஷ்ணன் பாலா**
**அமைப்பாளர்,**
**உலகத் தமிழர் மையம்**
**தமிழ் நாடு.**

# மணியோசையை இடியோசையாக்கும் கவிதைகள்

நெடுந்தீவு என்று சொன்னால்
ஈழத்து கலை இலக்கியத் துறையைப் பொறுத்த வரை
எனக்கு உடனடியாக நினைவுக்கு வருவது
நெடுந்தீவு மகேஸ்
நெடுந்தீவு லக்ஷ்மன்
போன்ற படைப்பாளிகள் தான்.
கலை இலக்கிய உலகில் -
தம் ஊர் பெயரை
தம் பெயருடன் இணைத்துச் செயற்பட்ட
கணிசமானவர்களை நாம் அறிவோம்.

நெடுந்தீவு மண்ணுக்கும்
பெருமை சேர்க்கும் வண்ணம்
நான் முன் குறிப்பிட்ட பெயர்களுடன்
நான் அறியாத மூத்த, இளைய படைப்பாளிகளுடன்
நெடுந்தீவு முகிலனும்
இணைந்து கொண்டிருக்கிறார்
என்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

முகிலனிடம் -
எனக்குப் பிடித்த
இன்றைய தலைமுறைப் படைப்பாளிகள்
மற்றும்
மூத்த படைப்பாளிகள்
சிலரிடம்
இல்லாத ஒரு பண்பு
விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளும் மனோபாவம்!

முகிலனின்
இந்த மனோபாவத்தை
இவரது இத்தொகுப்புக்கு
முன்னதான சாடிகள் கேட்கும் விருட்சங்கள் தொகுப்பின்
வெளியீட்டு விழாவில்,
கருத்துரை வழங்கிய பொழுது
முன் வைத்த கருத்துகளை
ஏற்றுக் கொண்டதை
நேரில் கண்டவன்

என்ற ரீதியில்,
இக்கருத்தைச் சொல்லுகிறேன்.

முகிலனின்
இந்த வளர்ச்சி
திடீரென்று ஏற்பட்ட ஒன்றல்ல.
இவரது
ஓயாத தேடல்தான்
அவ்வளர்ச்சிக்கான
அடிப்படைக் காரணமாக இருக்கிறது.

கவிதைக்கு மொழியானது
உயிர் போன்றது.
மொழியின் பயன் அல்லது பணி என்று
இதுவரை காலம் சொன்னவற்றிலிருந்து
விசாலம் அடைந்திருக்கும்
ஒரு யுகத்தில்
மொழியை உயிராய்க் கொண்ட
இலக்கியப் பிரதியையோ அல்லது
மொழியும் ஒரு கருவியாக
பயன்படும் கலைப் பிரதியையோ
படைக்க முனையும் ஒருவருக்கு
அது சார்ந்த மிகுந்த
அவதானம் தேவை அதாவது -
மொழியின் சூட்சுமம்
புரிந்துக் கொள்ளப்படவேண்டும்
ஏனெனில் இன்று
புதிய இலக்கணம்
புதிய சொல்லாடல்கள்
(தொலைபேசியில் பேசினான்
என்ற நிலைமாறி
தொலைபேசி பேசியது
என்ற நிலை ஆன மாதிரி).
உருவாகும்.
பயன்படுத்தப்படும் சூழலில்தான்
நாம் -
ஆக்கப் படைப்பிலக்கியத்தில்
ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

மொழியின் சூட்சுமம்
புரிதல் என்பது

ஓர் இலக்கியப் பிரதியின்
உருவத்தைச் சார்ந்த
பிரச்சினை மட்டுமல்ல
அப்பிரதியில்
சொல்ல முயற்சித்திருக்கும்
உள்ளடக்கத்தையும்
தாக்கபூர்வமான முறையில்
வாசிக்கப்படுவதற்கும்
பயன்படுகிறது.

அந்த வகையில்
முகிலனுக்கும்
தான் கையாளும்
மொழியின் சூட்சுமம்
புரிந்து விட்டது
என்பதை இத்தொகுப்பில்
உள்ள கவிதைகள் அனைத்தும்
எமக்கு புரிய வைக்கின்றன.

அவ்வாறு புரிந்த
மொழியின் சூட்சுமத்தின் வழியாக
அக்கவிதைகளில் அவர்
சொல்ல முனைந்திருக்கும்
உள்ளடக்கங்கள் கூட
எம்மில் தாக்கமான முறைகளோடு
அர்த்தமாகுகின்றன.

உதாரணத்திற்கு,

வறுமையினை வெளிச்சம்
போட்டுக் காட்டுவதற்கு
தேர்ந்தெடுத்த வரிகளில் அவர்
சொல்ல முனையும்
பின்வரும் இரு கவிதைகள்

**நகரத்துப் பாட்டிகளே**
**உங்கள் பழைய**
**சேலைகளை தாருங்கள்!**
**கிராமத்திலே**
**குமரிகள் இருக்கிறார்கள்**

**ஏழைகளின் வீட்டுக்கும்**
**வாருங்கள் விருந்தாளிகளே!**
**பரிமாறுவதற்குத் தாராளமாய்**
**பசி இருக்கிறது**

இன்றைய வாழ்வியலின்
படப்பிடிப்பாக
வந்து விழுந்த
வரிகள் கொண்ட
கவிதைகளாகின்றன

பின்வரும் இரண்டு கவிதைகள்

**குழந்தைகள் போல**
**மண் அள்ளித் தின்பதற்கும்**
**நம்மிடம் தானே...**
**சொந்த நிலங்கள் இல்லை -**

**அந்த மனிதர்கள்**
**ரோஜாக்களின் இனத்தை**
**சார்ந்தவர்களா....?**
**முட்கம்பிகளுக்கு நடுவே**
**பூத்துக் கிடக்கிறார்கள்**

ஆணாதிக்க மொழியின்மீது
மொழியே
தாக்குதல் செய்யும்
பெண்ணிய ஆயுதமாகிறது
இக்கவிதையில்

**கணவன் மனைவியை**
**மலடி என்கிறான் - வாசலில்**
**நின்றவாறு பிச்சைக்காரன்**
**அம்மா என்கிறான்**

இக்கவிதைகளைப் பாருங்கள்
இக்கவிதையில் எந்தவொரு
அநாவசியமான சொற்களும் இல்லை.
இக்கவிதையில்
ஏதோ ஒரு வரியில்
ஏதேனும் ஒரு சொல்லை
எடுத்து விட்டால்

இக்கவிதை
அகால மரணம் அடைந்திடும்.
இதுதான்
மொழியின் சூட்சுமத்தின்
நுழைவாயில்
முகிலனின் கவிதைகளின்
தனித்துவம்

முகிலனுக்கு
மொழியின் சூட்சுமம்
புரிந்து விட்டது
என்பதை இதைப் போன்று
இத்தொகுப்பில் அமைந்துள்ள
கவிதைகள் அனைத்தும்
எமக்கு
எடுத்துச் சொல்லுகின்றன.

**"கடவுளின் சயனத்தை கலைக்கும்
மணியோசை"**

மட்டுமல்ல
இத்தொகுப்பில்
அடங்கியுள்ள
அத்தனை கவிதைகளும்
இந்தச் சமூகத்தின்
நித்திரை நிலையை
கலைக்கும்
இடியோசைகளாக
எனக்கு கேட்கின்றன...

முகிலனுக்கு
என் வாழ்த்துக்கள்!

**- மேமன் கவி**
memonkavi@gmail.com

# ஈழத்து இலக்கியத்துக்குப் புதிய வரவு

ஈழத்து இலக்கியத்துக்குப்
புதிய - வரவாக
நெடுந்தீவு முகிலனின்
பிரவேசம் அமைந்துள்ளது.
கவிதைத் துறைக்கு
நம்பிக்கை தரும் வருகை .....
கவிதை என்பது
சந்தமும் கற்பனையும் கொண்டதாக
அமைய வேண்டும்
நெடுந்தீவு முகிலனின் கவிதைகளில்
இவை இரண்டும் உள்ளமை சிறப்பு .....
கவிதைத் துறைக்குக் கிடைத்திருக்கும்
ஆரோக்கியமான எதிர்கால கவிஞர்களில்
ஒருவர் நெடுந்தீவு முகிலன் என்பேன் ....

- செங்கை ஆழியான்

காலத்தைப் பிரதிபலிக்கும்
கவிதைகளைப் படைக்கும்
நண்பர் - நெடுந்தீவு
முகிலனின் கவிதைகள்
காலத்தை வெல்லட்டும்

– கவிஞர் இப்னு அஸீமத்

இனிமை செழுமை
புலமை இயல்பான சொல்வலிமை
கனிவும் நெடுந்தீவான்
கருத்துரிமை - புனிதஞ்சேர்
பொங்கும் புனைகவிதைப் புலத்தில்
வளர் முகிலன்
தங்கத் தமிழ் வடித்தான் காண்

**– நெடுந்தீவு மகேஷ்**

இலக்கியங்கள் குறைந்துவரும்
இக்காலத்தில் - பத்திரிகைகளிலும்
சஞ்சிகைகளிலும் ஆர்வத்துடன்
எழுதி இன்று........
நூல்களாக வெளியிட்டு வரும்
கவிஞர் நெடுந்தீவு
முகிலனைப் பாராட்டுகிறேன்

**– பா. தனபாலன்**
**தேசிய கல்வியற் கல்லூரி**

வளர்ந்து வரும் கவிஞர்கள் - இந்த
சமூகத்திற்கு, தேவையான வளமான
கருத்தின் முன்னேற்றத்திற்கு
வழிவகுக்க வேண்டும் என்பதோடு
இளம் கவிஞன் நெடுந்தீவு முகிலனின்
தொகுதிகள் தொடர்ந்தும் வர
வாழ்த்துகின்றேன்.

**– எஸ். அருள்நங்கை**
**புதிய உயர் கல்லூரி**

# ஏழாவது பிரசவம்

இதுவரை ஆறு கவிதை நூல்களை
தமிழ் உலகுக்கு தந்த
இளம்கவிஞன்
நெடுந்தீவு– முகிலனின்
ஏழாவது கவிதைத் தொகுதியாக,
கடவுளின் சயனத்தை கலைக்கும் மணியோசை
வெளிவருவது அவரின்
இலக்கியப் பணியை
இன்னும் இன்னும் மெருகூட்டுகிறது எனலாம்.

அமரர் சின்னத்தம்பி திருநாவுக்கரசு
கல்வி ஊக்குவிப்பு மையத்தின்
முதல் பணியாக
கவிஞர் நெடுந்தீவு – முகிலனின்
கடவுளின் சயனத்தை கலைக்கும் மணியோசை
கவிதைத் தொகுதியை
வெளியீட்டு வைப்பதில்
நாம் பேருவகை அடைகிறோம்.

**கந்தையா சந்திரகாந்தன்**
செயலாளர் வர்த்தக சங்கம்
அமைப்பாளர்
திருநாவுக்கரசு ஊக்குவிப்பு மையம்
மன்னார்

# கடவுளின் சயனத்தை கலைக்கும் மணிபோசை

கடவுள் இல்லை என்று
நான் நாஸ்தீகம்
பேசவும் வரவில்லை

கடவுள் இருக்கிறார் என்று
நான் ஆன்மிகம்
பேசவும் வரவில்லை

கடவுள் இருக்கிறாரா...
இல்லையா என்று
குழப்பநிலைக்கும் - நான்
செல்லவில்லை

கடவுள் என்ற வார்த்தை
காலம் காலமாய் இருந்து வருவதால்
சமூகத்தின் கண்ணீர்த் துளிகளை
இந்த பாத்திரத்துள் ஏந்தி வைத்திருக்கிறேன்

வறுமை, இடம்பெயர்வு, போர், அகதி, அநாதை, ஊழல், பாகுபாடு, வேலையின்மை, லஞ்சம், கொள்ளை, மோசடி, வரதட்சணை, கொலை, கற்பழிப்பு, தாழ்வு, களவு, காமம், அழிவு, பிணி, ஏழை, விதவை, பிச்சை, பழிவாங்கல், கொடுமை, ஊனம், கண்ணீர் என்று... சங்கிலித் தொடர்போல மனித வாழ்க்கை தொடர்கிறது. இவற்றை எல்லாம் கடவுள் பார்த்துக் கொண்டா இருக்கிறார். வேண்டாம் - அவரையாவது நிம்மதியாய் தூங்க விடுங்கள்.

மாதிரிக் கவிதைகள் - அல்லது கவிதைகள் மாதிரி

- நெடுந்தீவு - முகிலன்

Ward No - 13 Delft, East Jaffna.
+ 94 77 8039430
mukilanvsw@gmail.com
www.muki-clouds.blogspot.com

## கவிதை சாம்ராஜ்யத்தில் புதிய பாணி


மிக இளவயதில் ஆறு கவிதை நூல்களை வெளியிட்டு ஏழாவது நூலுடன் என்னைக் காண வந்திருந்தார் நெடுந்தீவு - முகிலன். கவிதை களைப் பார்ப்பதற்கு முன்னரே எனக்குப் பிடித்து விட்டது அவரது கவித்துவமான பேச்சு.

எல்லோரும் கவிதை எழுதுகிறார்கள் என்பதற்காக கவிஞர்களாகிட முடியாது. கவிதைகளில் உயிரோட்டம் இருக்க வேண்டும். படிப்பவர் களின் மனதில் அவை ஆழப் பதிய வேண்டும். வாசகர்களின் உதடு களில் அவை உச்சரிக்கப்பட வேண்டும். இவ்வாறான கவிதைகளே காலவோட்டத்தில் நின்று நிலைக்கக் கூடியவை. இவரது இத்தொகுதி யில் இவ்வாறான கவிதைகள் நிறையவே விதைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பல கவிதைகள் தேசிய பத்திரிகைகளில் பிரசுரமானவை.

கவிதை சாம்ராஜ்யத்தில் மரபுக் கவிதை, புதுக்கவிதையைத் தொடர்ந்து மாதிரிக் கவிதை என்ற புதிய பாணி ஒன்றைப் பிரசவித் துள்ளார் நெடுந்தீவு - முகிலன். இந்த மாதிரிக் கவிதைகளை பிரசுரிப் பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.


இவை
(க) விதைகள் அல்ல
விதைகள்
விருட்சமாகும்.

**வே. நவமோகன் (யாதுமூரான்)**
நிர்வாக இயக்குநர்,
காயத்திரி பப்ளிகேஷன்



மர நிழல்களின் கீழ்
மனித வாழ்க்கை
தங்கக் கூரைகளுக்குள்
கடவுள்

மிருகக் காட்சிச்
சாலைகளில் - ஏன்
மனிதர்களை
அடைப்பதில்லை
அடைக்கப்பட வேண்டிய
மனிதர்கள் நிறையவே
இருக்கிறார்கள் - ஆனால்
செல்லப்பிராணிகள் என்று
சில மிருகங்களையும்
வீட்டில்
வளர்த்து வருகிறோம்





கேலிச்
சித்திரங்களை
வரைபவர்களும்
உலகப் புகழ்
பெறுகிறார்கள்



கோடி
நட்சத்திரங்களைச்
சுமக்கிறது
ஒரே ஒரு வானம்

சமாதிகளுக்குள்
உறங்கிக்
கொண்டிருக்கும்
நம் சகோதரிகளின்
கனவுகள்
என்னவாய்
இருந்து
கொண்டிருக்குமோ...?





அம்மா
இல்லாத குருவிக்
குஞ்சுகளே
வாருங்கள்
அனாதை இல்லத்தில்
இணைத்து
விடுகிறேன்
அங்கே - அம்மா
இல்லாத
குழந்தைகளோடு
சேர்ந்து
விளையாடலாம்



ஒரு நாஸ்த்தீகவாதி
பஸ்ஸில்
பயணிக்கிறான்
மதகுருமார்களுக்கான
இருக்கையில்
அமர்ந்து கொண்டு



தலைவர்களே
காலத்தின்
தேவைகளுக்காய்
குரல் கொடுங்கள்



குழந்தைகளைப் போல
மண்
அள்ளித் தின்பதற்கும்
நம்மிடம் தானே
சொந்த நிலங்கள்
இல்லை.......



மூங்கிலை
கேலி செய்தவர்கள்
புல்லாங்குழலில்
பஜனை
ஓதுகிறார்கள்

எம் மீது
எறியப்பட்ட கற்கள்
இதோ....
சிற்பங்களாக
செதுக்கப்பட்டுக்
கொண்டிருக்கின்றன





ஓலைக் குடிசையின்
ஓட்டைகள்
வழியாக ஒழுகும்
மழை நீரை
பாத்திரம்
வைத்து ஏந்துகிறோம்
அப்படியே....
குடிநீரும்
சேகரிக்கப்படுகிறது



தலைவர்களின்
சிலைகளில்
எச்சமிடுகின்றன
பிணங்களைத்
தின்ற
காக்கைகள்...

ஒத்திகைக்கு நாள்
பார்ப்பதே
ஒத்திகையாகி
விட்டது






மரம்
வளர்ப்போம் - என
கோஷமிட்டவர்கள்
இப்போது
கோடரியை
கூர் செய்ய சொல்லி
கூச்சலிடுகிறார்கள்



சீதனத் தொகையின்
கணிப்பீட்டால்
திருமணமும்
வியாபாரமாகி விட்டது

பிள்ளைகள்
வெளிநாட்டில்
இருந்து கொண்டு
மணி ஓடரில்
பணம் அனுப்புகிறார்கள்
தாயின்
பிணம் எரிக்க.....





செம்மண்ணில்
முளைக்கிறதே
பச்சைச்
செடிகள் - அது
எப்படி...



அனாதைக்
குழந்தைகளுக்கு
யார்.....?
தாலாட்டுப் பாடி
இருப்பார்கள்
யார்.....?
பாலூட்டி
இருப்பார்கள்



துறவிகளின்
கனவிலும்
அழகிகளின்
நடமாட்டமா...?




சூரியனுக்கு
கல்
எறிகிறான்
ஒரு சிறுவன்




ஒன்றே குலம்
ஒருவனே தேவன்
சந்திக்கு
ஒரு கோயிலும்....
சாதிக்கு
ஒரு தெய்வமும்.....

தவறு
செய்தவர்களுக்கே
விடுதலை எனும்
விருது
வழங்கப்படுகிறது





தத்துவங்களின்
ஆதிக்கம்
எழுத்துக்களில்
மட்டுமா..?



பூக்கள்
தூவி
அர்ச்சனையும்
செய்யப்படுகிறது
அஞ்சலியும்
செய்யப்படுகிறது

அந்த
மனிதர்கள்
றோஜாக்களின்
இனத்தைச்
சேர்ந்தவர்களா..?
முட்க்கம்பிகளுக்கு
நடுவே
பூத்துக் கிடக்கிறார்கள்






மோசமாய்
விரல்களையும்
நீட்டாதீர்கள்
ஆயுததாரிகள்
என...
கைது செய்து விடக் கூடும்




கணவன்
மனைவியை
மலடி என்று
திட்டுகிறான்
வாசலில்
நின்றவாறு
பிச்சைக்காரன்
அம்மா
என்கிறான் 🔔



போலிகளை
நம்பியது
போதும் 🔔



அதிகார
வெயில்
சுட்டெரிக்கையில்
நிழலுக்கு எங்கே
ஒதுங்குவது..! 🔔



நகரத்து
பாட்டிகளே
உங்கள்
பழைய சேலைகளை
தாருங்கள்
கிராமத்திலே.....
குமரிகள்
இருக்கிறார்கள் 🔔

உதிரும்
இலைகளும்
உரமாகி
விடுகின்றன 🔔





பட்டினி
கிடப்பது பற்றியும்
பாடசாலைகளில்
கற்றுக்
கொடுங்களேன்..! 🔔



மந்தைகள்
கூட்டம்
மேய்ப்பவனையும்
மேய்கிறது

உண்ட பின்
ஒருவன்
புகைப்பிடிக்கிறான்
இன்னொருவன்
தாம்பூலம்
சாப்பிடுகிறான்
மற்றவன்
ஐஸ்கிறீம்
உண்கிறான்
ஆனால்
ஒருவன்
சாப்பிடாமலே
இருக்கிறான்





எத்தனை
தசாப்தங்களாக
அடிமைப்படுகிறோம்
சித்திரவதைக்
கூடமான
இந்த தேசத்தில்....



குரல்
கொடுக்க
வந்தவர்களும்
மாறி மாறி
குரைத்துக் கொண்டு
இருக்கிறார்கள்

கட்டிய கந்தல்
துணியோடும்
காய்ந்து போன
வயிறோடும்
ஒற்றைக் காலில் தேய்ந்து
போன
றப்பர் செருப்போடும்
கையில் ஈக்கள்
மொய்க்கும்
முடிச்சோடும்
தெரு ஓரம் மூன்று கல்லு
வைத்து - அதிலே
ஒரு பானை வைத்து
ஏரியில் தண்ணீர் எடுத்து
அரிசிக்கு பிச்சை எடுத்து
ஒரு நேர வயிறு
நிறைப்பதற்குள்
விடிந்து விடுகிறது
அடுத்த நாள்





ஆத்மாக்களையாவது
அமைதியாய்
உறங்க
விடுங்கள்



எரிக்கப்பட்ட
சமூக விசுவாசியின்
சடலத்தில் எஞ்சிய
சாம்பலைக் கூட
விட்டு
வைக்குதில்லையே
காற்று

இறக்கைகளை
வெட்டி விட்டு
இன்னும்
முளைக்கவில்லை
என்றால்
நியாயமா?






பூமியும்
சுழல்கிறது
நாமும் தான்
சுழல்கிறோம்



காய்ந்து
நிர்வாணமாய்
கிடக்கும்
நிலங்களுக்கு
பச்சைப் புடவை கட்டி
அழகு பார்க்கிறான்
இடுப்பில்
ஒரு
துண்டோடு மட்டும்
நிற்கும்
விவசாயி

சூரியனை
புதைப்பதற்கு
சிலர்
குழிவெட்ட
நினைக்கிறார்கள்





பேய்
பிசாசுகளின்
ஊர்வலம்
புனிதத் தெருக்களில்...



இராவணர்களே !!
சீதைகளை
வசப்படுத்த
பத்து
தலைகளுக்குமா
இராமனின்
முகமூடியை
அணிவீர்கள்

கனவு
காண்பதற்கே
விழிகளைக்
கடன்
வாங்க வேண்டி
இருக்கிறது






இரவின்
விரிசல்
எம்மையே
எமக்கு
இனங் காட்ட
மறுக்கிறது




தாய்ப்
பசுவை
விட்டு விட்டு
கன்றுக் குட்டிகள்
பாற்காரனுக்குப்
பின்னால்
ஓடுகின்றன

மாறுவேடத்தோடு
எத்தனை
வருஷம் தான்
வாழ்க்கை
நடத்துவீர்கள்..!





ஏற்றுமதி
செய்வதற்கு
நம்மிடம்
இருப்பது
வியர்வைத் துளிகளே..!



பலி பீடத்திற்கு
இப்போது
மனிதர்களும்
அழைக்கப்படுகிறார்கள்

கல்யாண
கனவுகளோடு இருந்த
சகோதரிகள்
மண்ணை
அணைத்துக் கொண்டு
பிணங்களாக...





முகமூடிகளுக்குள்
பத்திரமாய்
பதுங்கி
இருக்கிறது
முகம்



நியாயத்திற்காய்
கண்டனக்குரல்
எழுப்பினாலும்
தண்டனைக்குரியதாகி
விடுகிறது

நொண்டிகளுக்கு
யாராவது
உதவுவீர்களா?
ஊன்று கோல்களைப்
போல..!





விசிறிகளுக்கே
இங்கு
வியர்க்கிறது



குயில்களாவது
பத்திரமாய்
காகக் கூடுகளுக்குள்
முட்டை
இடுகின்றன
குழந்தைகள்
குப்பைத்
தொட்டிகளுக்குள்

வயிற்றில்
குழ்ந்தையோடு
வரும் பெண்ணுக்கு
எழுந்து
இடம் கொடுக்கிறாள்
கையில்
குழந்தையோடு
இருக்கும் பெண்
பக்கத்து பக்கத்து
இருக்கைகளில்
எல்லாம்
காதல் ஜோடிகள்





பழசான
தாவணி
பிறவி எடுக்கிறது
புதுத்
தலையணையாய்....



எங்கோ ஓர்
மூலையில்
எமது
உறவுகளின்
எலும்புகளும்
தோல்களும்

கடைசி
அழுகை என்று
நினைத்து
ஒவ்வொரு முறை
அழுதாலும்
கண்ணீர்
முடிவதில்லையே.....






பங்காளிகளும்
துரோகிகளாகி......
விடுகிறார்கள்



சமுதாயம்
போலி
முகங்களையே
காதல்
செய்கிறது 🔔

சாவு
சிரித்துக்
கொண்டு
வரவேற்கிறது 🔔





தொலைந்த
இடங்களில்
கால்
கைகளை
தேடி அலையும்
நொண்டிச்
சமூகமாகி
விட்டோம் 🔔



எல்லோர்
கைகளிலும்
பிச்சைப்
பாத்திரம்
என்றால்
யாரிடம்
நீட்டுவது.....?

முழுச் சுதந்திரமும்
கொடுக்கப்பட்டு
இருப்பது
கட்டாக்காலி
நாய்களுக்கே...





இருட்டுக்கு
கறுப்பைப்
பற்றி
பாடம்
சொல்லிக்
கொடுப்பதா...?



காட்டுக்கு
விறகு
வெட்டப்
போன
தந்தை
திரும்பி
வீடு வரவில்லை
யாரால் - இவர்
விறகாய்
வெட்டப்பட்டாரோ...?

இரத்தமும்
சதையும்
இங்கே
மலிவாகப்
பெற்றுக் கொள்ளலாம்.





காற்றின்
பாதச் சுவடுகள்
சுவாசப்
பைக்குள்ளாவது
பதிந்திருக்க
கூடுமா?



நிலவு
வெள்ளைப் புடவை
கட்டி
விதவையாகி
விட்டாள்
வானவில்லோ
வண்ணச் சேலை
கட்டி
வலம் வருகிறாள்

முடிவை
எழுதுகிறவனே
தொடக்கத்தையும்
நிறைவானதாக்கு..!





பிசாசுகளோடு
எந்த
மொழியில்
பேசிக் கொள்வது



பூனைகளைப் போல
பதுங்கி
நின்று
பார்க்கத்தான்
தெரிகிறது
அவர்களின்
எலி
விளையாட்டுகள்

நாஸ்தீகவாதிகள்
தாங்கள்
கடவுள்களாகி விட
ஆசைப்படலாமா...?






இடர்களோடு தானா...
இனியும்
நமது வாழ்க்கை
தொடரப் போகிறது....



தண்டனைக்கு
உரியவர்களே
தண்டனை
வழங்குகிறார்கள்
கேட்க நீதி
என்கிறார்கள்

மனித
முகங்களோடு
மிருகங்கள்
நடமாடிக்
கொண்டிருக்கின்றன





சிறைச்சாலைகளை
மூடுங்கள்
பாடசாலைகளைத்
திறவுங்கள்
என்றால்
சிறைச்சாலைகளுக்குள்ளும்
பாடசாலை
மாணவர்கள்



போர்வைகளால்
மூடிக்
கொண்டாலும்
கத்தும் (சமூக)
தவளைகளின்
சத்தம்
கேட்கத் தான்
செய்கிறது!

மின்சாரம்
வழங்குவதாய்
கதை சொல்லி
நடப்பட்ட
வெறும்
கம்பங்களும்
உக்கி விட்டன





சீர்திருத்தம்
எனும்
பெயரில் - இனி
பிளவுகள்
வேண்டாம்



பூக்களுக்காய்
குரல்
கொடுத்தவர்கள்
தேன் கூடுகளுக்கு
கல்
எறிகிறார்கள்

இரவுக்கும்
நிலவுக்கும்
இச்சை என்று
வைத்துக்
கொள்வோம்
எதற்காக..
நிலவு
இடையிடையே
ஓடி ஒழிந்து
விடுகிறது





கண்கள்
இருக்கிறது
தானே- என்று
நாளைக்கும்
நாம்
கனவுகளையா...
காண்பது



கரைகளைத்
தேடி
அலைந்து
கொண்டிருக்கிறோம்
அலைகளாகவும்
அனாதைகளாகவும்

வெற்றிக்
கொடியில்
இரத்தக்
கறைகளா?





கற்க வந்த
மாணவியை
ஆசான்
கலவிக்கு
உட்படுத்துவதா?



காகிதத்தில்
வரைந்து
வைத்த
பறவைகளும்
பறந்து விட்டன
காற்றின்
அசைவுகளுக்கு

உதடுகளுக்கு
பூட்டுப்
போடப்பட்டு
விட்டது
ஜனநாயக
தேசத்தில்.....






விருதுக்காக
ஒருவன்
எழுதுகின்றான்
விதவையான
வெள்ளைத்
தாள்களில்



சமுத்திரம்
செல்லும்
கனவோடு
மீன்
குஞ்சுகள்
மேசை
மீன்
தொட்டிகளுக்குள்

போலிப்
புன்னகைகளோடே
அவர்கள்
ஊர்வலம்
வருகிறார்கள்






இரத்த வாடை
வீசுகையில்
சுதந்திரக்
காற்றை - எப்படி
சுவாசிப்பது



தெரு நாய்கள்
காலை
உயர்த்தி
பூச்செடிகள் மீது
சலம்
விடுகின்றன

பலரின்
அழகான
வாழ்க்கையும்
சேரிச் சகதிகளுக்குள்
புதைக்கப்பட்டிருக்கிறது





வேதனையின்
உள்ளீட்டில்
சந்தோசத்தின்
இருப்பு



அதோ
தேர் ஓடும்
தெருவில்
இருந்து
சற்று முன்னர் தான்
துரத்தப்பட்டார்கள்
பிச்சைக்காரர்கள்



வரலாறுகளை
தவிர
நீண்ட தூரம்
பயணம் செய்ய
யாராலும்
முடியாது





சாக்கடைகளுக்குள்
தள்ளிவிட்டுப் போகும்
சினிமாவும்
தேசிய ரீதியில்
விருது
வாங்குகிறது



சமாதான
புறாவுக்கும்
சிறகுகள்
வெட்டப்பட்டு விட்டன

புத்தகங்கள்
உயிரோடு
இருக்கின்றன
எழுத்தாளர்கள்
இறந்து
விடுகிறார்கள்





கனி தரும்
மரங்களும்
காலப்போக்கில்
விறகுகளும்
தருகின்றன




பட்டாம் பூச்சிகள்
பாக்கியம்
பெற்றவைகள் !
நாளாந்தம்
உண்பதற்கு
பூக்கள்
பூக்கிறதே

கனவு
மூட்டைகளைச்
சுமந்து கொண்டு
அகதிகள்
வரிசையில்
நிற்கிறோம்





சவப்பெட்டி
விற்பனை
செய்யும்
கடைகளிலும்
சாமிப்படங்கள் தான்
தொங்குகின்றன




வாழ்க்கை
வரட்சியாகி
விட்டது
பாலைவனங்களை விட

தூவானமும்
சிலவேளை
முழுதையும்
நனைத்து
விடுகிறது





உறக்கத்தின் போதும்
இதயம்
துடித்துக் கொண்டுதானே
இருக்கிறது



நரம்பு
அறுந்த
யாழுக்கான
இரங்கற் பாவை
எழுதுகிறான்
விரல்கள்
இல்லாத
தொழு நோய்க்காரன்

சுதந்திரப்
பெண்ணுக்கு
வயதான போதும்
அதிகார
ஓமோன்கள்
சுரக்கிறதே..!






கடல் சோகத்தில்
அமைதியாக
விரிந்து கிடக்க..
நிலவு
கண்ணாடி என்று
முகம்
பார்க்கிறதாம்



உறவுகளை
அகதியாக்கியதற்கு
விலங்கிட்டு
சிறையில்
அடைத்திருக்கலாம் 🔔

அறுவடை
செய்யப்
போனால்
வயலில்
எலும்புக்
கூடுகளின்
விளைச்சல் 🔔





புழுவாய்
இருந்து
வந்ததுவே
பட்டாம் பூச்சி 🔔



மரணம்
வரையிலும்
உயிர்கள்
ஏதோ ஒன்றை
தேடிக் கொண்டே
நகர்கின்றன 🔔

இறந்தவர்கள்
நினைவாக
தூபி
கட்டுவதா?
இருப்பவர்களின்
நிகழ்காலத்திற்கென
வீடு
கட்டுவதா....? 🔔





வலிகளில்
எழுதிய
அத்தியாயங்களுக்கு
சுகமான ஒரு
தலைப்பு 🔔



எதிர்காலம்
வறுமைத் தீயில்
எரிந்து
கொண்டிருக்கிறது
சம்பந்தப்பட்ட
அதிகாரிகளே
சாம்பலாகும்
முன்பாவது
அணையுங்கள்



உயிரோடு
இருக்கிறோம் - ஆனால்
நாம்
உணர்வுகளால்
இறந்து போனவர்கள்



பூக்களாவதற்குள்ளே
வண்டுகள்
மொட்டுக்களை
முகர்ந்து
பார்க்கின்றன



ஒருவனின்
முகத்தை
இன்னொருவன்
முகமூடியாக்கி
விடுகிறான்



பேச்சளவில்
கூட இல்லையே
இயல்பு
வாழ்க்கை




ஆறுகளில்
சிவப்பு நீர்
ஓடுகிறது
நமக்குள்
யாரோ....?
கொல்லப்பட்டிருக்கிறார்கள்.



இடம்பெயர்ந்தவர்கள்
உட்காருவதற்கே
இடமில்லை
வானத்தை
தொட்டு விடும்
அளவுக்கு
தலைவர்களின்
கட்டவுட்டுக்கள்



துருப்பிடித்தவர்கள்
தூய்மையை
விமர்சிக்கிறார்கள்



இரத்த கறைபடிந்த
சட்டைகளை
அணிந்து கொண்டு
கைலாகு
கொடுப்பதா....?




பூபாளம்
என்று
இசைக்கிறோம்
அவலக்குரல்
கேட்கிறது



செருப்புக்களை
முட்கள்
தின்று விட
பாதங்கள்
அனாதையாகி
விட்டன




காலத்தின்
நிழலிலாவது
ஓய்வெடுப்போம்



துன்பப்
பிரளயங்களுக்குள்ளும்
கண்ணீர்
நிரம்பி விட்டது

திண்ணைகளில்
உட்கார்ந்து கொண்டு
கணவர்களின்
திருவுருவப் படத்தை
சிம்மாசனத்தில்
வைத்துப் பார்த்தபடி
கண்ணீரை
வெள்ளைச்
சேலையால்
துடைக்கும்
விதவைகளே!!
காலமாவது
பதில் சொல்லுமா..?





கடவுள்
உயிரோடு
தானா
இருக்கிறார்



இயற்கையை
சொந்தம்
கொண்டாடுகிறான்
கவிஞன் 🔔

புரிந்துணர்வு
மறந்து
போனவர்களோடு தான்
மனிதநேயம்
பேசப்பட்டுக்
கொண்டிருக்கிறது 🔔





மௌனம்
வார்த்தைகளை
அடை காக்கிறது 🔔




காலத்தின்
குழந்தைகள்
வெறுமையின்
கரங்களில்

கூரையின்
ஓட்டைகளுக்குள்ளால்
எட்டிப் பார்த்து
காலை
வணக்கம்
சொல்கிறது
சூரிய ஒளி







திருடப்பட்டு
விட்டது
நேற்று
பிச்சை எடுத்த
உடைந்த
அலுமினியத்
தட்டுக்களும்




வயலுக்குப் போகும்
நீரை
வேரை விட்டு
உறிஞ்சிப் பருகும்
களை
மனிதர்கள்
பெருகிவிட்டனர்

மணம்
முடிக்கும் முன்னரே
கனவுகள்
கர்ப்பமாகி விடுகின்றன





கூண்டுகளுக்குள்
அடைக்கப்பட்ட
குருவிகள்
சிறகுகளை
மறந்து
விடுகின்றனவா...?



நமது
தோலை உரித்து
ஆடை நெய்வோமா....
அடுத்த
தலைமுறைக்காக

மனிதர்களே
மனங்களையும்
சலவை
செய்யுங்கள்





தங்கத் தட்டை
நீட்டி
பிச்சை
கேட்கலாமா...?



மௌன
போராட்டத்திற்கு
எந்த
ஆயுதங்களைப்
பயன்படுத்துவது

அழகிப்
போட்டிக்கு
ஒரு போதும்
விண்ணப்பித்ததில்லையே
நிலவு





மரண
ஊர்வலங்களே
மறந்து போகாத
சம்பவங்களாய்
பதிவாகி விட்டன



தர்மத்தை
அடைகாத்தவர்கள்
அதர்மத்திற்கு
அடிமையாகி விட்டார்கள்

தெருக்களில்
ஒவ்வொரு
நாட்களும்
பிச்சைக்காரர்கள்
தேர்தல்
காலத்தில்
புதுப்புது
பிச்சைக்காரர்கள்





கடந்த
காலங்களை
கல்லறைகளில்
தேடி வருகிறோம்



இருள் தான்
ஆடையான போது
வெளிச்சத்தை
விரும்புவதா..

வட்ட மேசைகளில்
"மினரல் வாட்டர்"
இருக்கையில்
ஞாபகமாவது வருமா..?
நமது
குடிநீர்ப் பிரச்சினை






இரவிலே
ஒரு
பள்ளிக்கூடம்
நட்சத்திர
மாணவர்களோடு



தாய்ப்பறவையில்
இருந்து
தசை வெட்டப்பட்டு
குளோனிங் முறையில்
குஞ்சு
தயாரிக்கப்படுகிறது

பேய்களின்
உதடுகளில்
புல்லாங்குழல்
சங்கீதம்
மரண
ஓலமாகிவிட்டது





நமது
பயணத்தில்
பதுங்குகுழிகளும்
புதைகுழிகளாகவே
மாற்றப்பட்டன



நீண்ட
அகதிகள்
வரிசையில்
நின்றவர்களில்
அனேகமானோர்
அனாதைகளாகவே
இருந்தார்கள்

முதிர்ந்த
விருட்சங்களிலும்
இளமை
அரும்புகளின்
வரவு





சாக்கடை
மனிதர்களே
ஒரு முறை
பூக்கடைக்கு
வந்து
பாருங்கள்



சாபமிடுபவர்கள்
சாதித்து
விடுவார்களா? 🔔

சாத்தன்களோடு
சமாதானமா....?
நாமே
எமக்கான
சமாதியை
தயாரித்துக்
கொள்வோம் 🔔







இத் தேசம்
நடிப்புகளுக்கான
அரங்கமாக
மாறிவருகிறது 🔔



இறுதிப் பயணம்
என்பது
மரணத்தின்
வாசல்
நோக்கியது

பிச்சைக்காரர்களைப்
பாராட்ட வேண்டும் !
பிச்சை எடுக்கும் போது ..
அம்மா தாயே என்று
பெண்களைக்
கௌவரவப்படுத்துகிறார்களே






கிறுக்கல்களை
கவிதை
என்பது போல
வாழ்க்கையின்
சில சிதறல்கள்
அபூர்வமானவை



அமாவாசை
இரவில்
நிலவைத்
தேடுவதா....?

குப்பைகளில்
வீசப்பட்டிருகக்கும்
எச்சில்
இலைகளையும்
கிளறுகிறார்கள்
பசியில்
வாடும்
தெருவோர நண்பர்கள்





சுயநலவாதிகளே !!
முதல்
ஏமாற்றுக்காரர்கள்



நகரவாசிகள்
ரீ.வி.
சனல்களிலே
கிராமத்தைப்
பார்க்கிறார்கள்

தூங்க வைப்பதற்கே
தாலாட்டுப் பாடிய தாய்
நிரந்தரமாய்
உறங்கிய போது
ஒப்பாரி
பாடுவதற்கு
ஒருவரில்லை





வாயாடிகளே
தமிழில்
நியாயம்
என்றொரு
வார்த்தையும்
இருக்கிறது




எலும்புக்
கூடுகளே
எம் உறவுகளின்
மீதி
சொத்துக்கள்

கூலிக்காகவே
வேலை
செய்வதாக
இருந்தால்
வரதட்சனைக் கூலி
எந்த
வேலைக்காக..!





நாளைய
உணவே
ஏழையின்
கனவான போது
இரவோடு இரவாக
அதற்கும்
விலை ஏற்றப்படுகிறது



மனிதர்களே
மனிதர்களை
மனிதர்களுக்கு
விலை
பேசுகிறார்கள்



சமுத்திரத்துள்
ஓட விடுகிறார்களே
காகிதக்
கப்பல்களை




ஓவியனின்
குருதியும்
இடையிடையே
வர்ணமாக்கப்படுகின்றது



கூந்தலில்
சூடும்
கனவோடு
முற்றத்தில் நட்ட
மல்லிகைச்
செடியின்
முதல்
பூவும்
தந்தையின்
சடலத்தில்

உயரப் பறக்கும்
துணிவில்
பறவைகளுக்கு
முகிலில்
கூடு கட்டும்
எண்ணமா...?





முதல்
கொழுந்து
விடுவதற்குள்ளே
முளை
சுரண்டப்படுகிறது



வரட்சியான
காலங்களிலும்
வீரர்களின்
கல்லறை
அருகில்
பசுமையான
உணர்வுகள்

நேற்று
இறந்து விட்டதாக
எண்ணுகிறோம்
இன்றைய
கனவில்
சுடுகாடுகளில்
இருப்பதால்





தொலைவில்
இருள் சூழ்ந்த
மலை
தெரிகிறது
அது
மலை அல்ல !
மின்சாரம்
வழங்கப்படாத
"ஒரு கிராமம்"



சூரியனுக்கு
சோம்பல்
வருவதில்லையா
சரியான
நேரத்துக்கு
விழித்து
விடுகிறானே....

ஒவ்வொரு
வருடமும்
நினைவு கூறுகிறோம்
இழந்தவைகளைப்
பற்றியே





மனக் காயங்களுக்கு
இன்னும்
மாத்திரைகள்
கண்டுபிடிக்கப்
படவில்லையே



இப்போதும்
பொம்மைகளையே
அணைத்துக் கொண்டு
உறங்குகிறாள்
விழிகளிலோ
கல்யாணக் கனவு
வயதோ........
நாற்பத்தி மூன்று

பொதுநலம்
பூக்களுக்கும்
இல்லை
அவ்வப்போது
வண்டுகளோடு
வாழ்ந்து
விடுகின்றன





அகதிகளின்
கிராமத்தின்
ஊடாக
காது வைத்துக்
கேளுங்கள்
ஒப்பாரி
ஓதப்பட்டுக்
கொண்டிருக்கிறது



சேற்றுக்குள்
புதைந்து போன
விவசாயிகளின்
பாதங்களை
சுத்தப்படுத்துகிறது
அவனது
வியர்வைத்
துளிகள்

உரிமைகளைக்
கேட்டுப்
போராடுவோம்
என்றால்
வெறும்
வார்த்தைகளால்
வாதாடுவதற்கான
வலிமையும்
பறிபோய்விட்டது





பிரம்புகளால்
போதிக்கப்படுகிறது
மனித உரிமை



விரலை
அடகு வைத்து
வீணை
வாங்குவதா

விழுதுகள்
விறகானால் என்ன
வேர்களின்
மௌனம்
வெளியே
தெரியும்
காலம் வரும்






கடவுளின்
சயனத்தையும்
கலைக்கிறது
மணி ஓசை




இலை
உதிர் காலத்தில்
இடம்பெயருகின்றன
பறவைகள்

விழிகள்
துயில்கின்றன
ஆனால்
கனவுகளோ
விழித்திருக்கின்றன






புன்னகைக்கும்
உதடுகளே !!
பொய்களையும்
மனப்பாடம்
செய்து
கொண்டிருக்கிறது



அதிகார
வர்க்கங்கள்
ஆன்மாவையும்
சேர்த்து
சுரண்டுகின்றன

பூச்சிகொல்லி
பானங்களை
பூவிலா
தெளிப்பது






மேடை
ஆட்டமாக
மாறிவிட்டது
வாழ்க்கை
வட்டமும்



உயிரோடு
இருக்கும் போது
எதற்காக
புதைகுழிகள்
தோண்டப்படுகிறதோ

நாம் நட்ட
மரங்களின் கீழ்
நிழலுக்கு
ஒதுங்கவே
நமக்கு
உரிமை இல்லை..
நீங்களோ
ஊஞ்சல் கட்டி
ஆடுகிறீர்கள்





பாட்டியின்
முணுமுணுப்பு
தூங்கவிடவில்லை
காதலியின்
கனவோடு
இருக்கும்
பேரனை




கனவிலாவது
முதலாளிகளாக
இருப்போம்
என்றால்
வாங்கிய கடனை
யார்
அடைப்பார்கள்

காவல்
பொம்மைகளின்
தலைகளில்
குருவிக் கூடுகளா?





திருடனாலும்
எடுத்துச்
செல்ல
முடிவதில்லையே
கிணற்றுக்குள்
தெரியும்
நிலவை



மின்மினிப்
பூச்சிகளுக்கு
எங்கிருந்து
கிடைக்கிறது
மின்சாரம்



சலனமின்றி
சேற்றுக்குள்
கால்
வைக்கின்றன
வெள்ளை
நாரைகள்




நட்சத்திரங்கள்
ஒன்று சேர்ந்து
நிலவை
விமர்சிப்பதில்
என்ன பயன்



நீண்ட
முடிகளுக்கான
விளம்பரம்பரப் பலகை
தொங்குகிறது
சலூன்
கடைகளில்

எறும்புகளின்
இரையாகிப்
போகிறது தானே
வாசலில்
போட்ட
வண்ணக் கோலமும்





சுடுகாடுகள்
நிறைந்து
விட்டதே
கல்லறைகள்
குட்டியா....?
ஈனுகின்றன



வயல்
நிலங்களில்
எலும்புகளை
புதைத்து
குருதியைத்
தெளித்தால்
மனிதர்கள்
முளைப்பார்களா..?

மரபுகள்
இருட்டறையில்
சிறை வைக்கப்பட்டு
விட்டன
நாகரிகம்
வெளிச்சத்தில்
ஒளித்துப் பிடித்து
விளையாடுகிறது





தூறல் மழையின்
சுவடுகளையே
ஒரு வாரத்துக்கு
மேலாக
ஞாபகப்படுத்துகிறது
குன்றும்
குழியுமான
நமது
வீதியோரங்கள்



பசி
வயிற்றைக்
கொத்துகிறது
அப்போதும்
கிளி
யோசியம்
கேட்கப்படுகிறது

அநியாயத்தையே
அடையாளம்
காட்டுவதை
விட்டுவிட்டு
சமுதாயத்திற்காய்
குரல்
கொடுங்கள்






குழந்தைகளே !!
இனி
விரல் சூப்புவதையே
தொடருங்கள்
பால்மாவுக்கு
விலை ஏறிவிட்டது



நமக்கான
வரலாறுகள்
இரத்தத்தால்
எழுதப்பட்டவை

தூக்குக் கயிறுகளும்
கூரிய ஆயுதங்களும்
விச மருந்துகளும்
நம்மிடம்
மிச்சமாய்
இருக்கின்றன
எப்போதாவது
துன்பம் வரும் போது
சந்தோசமாய்
தற்கொலை
செய்து கொள்வோமா





மேடு பள்ளமான
புதர்களிலும்
வரிசையானதுவே
எறும்புகளின்
பிரயாணம்




காலையில்
தேநீர்
பருகுகிறோம்
அழகான
வாசனைகளோடு - அது
மலையகப்
பெண்களின்
வியர்வையாக
இருக்கலாம்

ஏழைகளின்
வீட்டுக்கும்
வாருங்கள்
விருந்தாளிகளே
பரிமாறுவதற்கு
தாராளமாய்
பசி இருக்கிறது





சூரிய
விரல்களாலே
பனியில்
குளித்த
பச்சைக் குமரிகள்
தலை
துவட்டுகின்றனர்




சருகுகள்
காற்றில் பறக்கையில்
பட்டாம் பூச்சிகள்
என
கனவு காண்பதா....

சுவாசக் காற்றே
இயற்கையிடம்
வாங்கும்
முதல்
கடன்






கொலைவாள்களின்
கூர்மையில்
செதுக்கப்படுகிறது
புரட்சிக்
கவிதைகள்



கின்னஸ்
புத்தகத்தில்
பதிவு செய்து
கொள்ளுங்கள்
அதிகம்
இழந்தவர்கள்
நமது
சந்ததி என்று



அவமானம்
பூமிக்குப்
புதிது
அல்ல....




ஒவ்வொரு
முறையும்
உலகம்
ஒரே மாதிரி
விடிந்தாலும்
இருண்டாலும்
வாழ்க்கையோ
ஒவ்வொரு விதமாக



தோட்டத்து
உரிமையாளனை
ஓடஓட
கலைத்து விட்டு
தேவதைகள்
பூக்கள்
ஆய்கிறார்கள்

எழுதப்படாத
சட்டங்களே
நடைமுறை
படுத்தப்படுகின்றன
எழுதப்பட்ட
திருமணங்களோ
விவாகரத்து
கோருகின்றன





கனவுகளின்
எல்லைக் கோடுகளிலும்
வேற்று
நாட்டவர்களின்
நடமாட்டம்



கருக்கள்
களவு போய் விட்டன
வெறும்
கோதுகளையே
அடைகாத்து
வருகிறோம்

"செய்யும் தொழிலே
தெய்வம்"
கொலைகள்
தொடர்கிறது
பிணங்கள்
குவிக்கப்படுகின்றன





வேர்களில்
இருக்கும்
உயிரையும்
ஏன் இவர்கள்
கோடரி போட்டு
கொத்திப்
பார்க்கிறார்கள்



பூப்படைந்த
நாளிலே
மலர்கள்
உதிர்ந்தும்
விழுகின்றன

அமைதியான
இரவில்
அவர்கள்
விழித்திருக்க
நிலவோ
தூங்கிவிட்டது





மரித்தால்
உடலைப்
புதைப்பது தானே என்று
உயிரோடு
இருக்கையில்
வாழ்க்கையை
புதைப்பதா?



கரை ஒதுங்கிய சடலம்
இனங்காண்பதற்குள்ளே
தூரத்தே
மிதந்து தெரிகிறது
இன்னொரு
சடலம்

காகிதப்
பூக்களைச்
சுற்றுமா
வண்ணத்துப் பூச்சிகள்





தலையிடிக்கு
ஆஸ்பத்திரிக்குப் போய்
வைத்தியர்
வரும் வரை
காத்திருப்பதில்
காய்ச்சலே
வந்து விடுகிறது



தருகிற சீதனம்
போதாது
என்கிறான்
ஏன் - என்று
கேட்டால்
முதல் மனைவி
கர்ப்பமாக
இருக்கிறாளாம் !

நமது
நலம் விசாரிக்க
நாளை காலையில்
சூரியனாவது
வருவான்
தானே.....





மலர்கள்
பிணங்களை
அலங்கரிக்கின்றன
பாவம்
செடிகள்
அனாதையாகி விடுகின்றன



நெருப்பைச் சுமந்து
கொண்ட
நமது வாழ்க்கை
வறுமைக்
குளிரில் நடுங்குகிறது

பசுவின்
மடியில் இருந்து
கறக்கப்படும் பாலில்
கன்றின்
தாகமும்
கலந்திருக்கிறது






நினைவுகளைத்
தராசில்
நிறுத்தினால்
சோகங்கள்
பக்கமே
பாரம்
இழுக்கும்



தலைவர்களுக்கு
மாலை அணிவித்து
வரவேற்றால்
அவர்களின்
பேச்சும்
உதிர்ந்து போகிறதே...

எங்கோ
ஊளையிட்டுக்
கேட்கிறது - அது
நரியோ..
நாயோ...
மனிதர்களாகவும்
இருக்கலாம்






புகைவண்டியின்
ஜன்னல்
அருகில்
ஓர் அனாதை
போய் வருகிறேன் என
பூக்களுக்கே
கை
காட்டுகிறான்



தொழுகைக்காக
இறக்குமதி
செய்யப்படுகின்றன
தொழில்நுட்பம்
வாய்ந்த
கடவுள் சிலைகள்

பால்மாவின்
விலையை
கருத்தில் கொண்டே
குழந்தைகளின்
எண்ணிக்கையும்
தீர்மானிக்கப்படுகின்றது





எதிரிகளை
மன்னித்தாலும்
அவர்களால் - அதை
நம்பவே
முடிவதில்லை....






தலைவர்கள் ஒருவேளை
உண்ணாவிரதம் இருந்தால்
உலகெல்லாம்
பேசப்படுகிறது
நாம் பட்டினியாகவே
நாள் முழுதும்...

சுவாசம் கூட
தற்காலிகமானது





பயணிகள் நாற்றத்துக்கு
மூக்கைப் பொத்திக்
கொண்டு செல்கிறார்கள்
ஓரத்தில் கிடக்கிறது
ஒரு காய்ந்த
நிர்வாணமான சடலம்



சடலம்
சுடலைக்கு
போகும் முன்னரே
சகோதரர்கள்
சொத்துக்கு
அடிபடுகிறார்கள்

இழப்புக்களை
இலையுதிர் காலம்
எனக்....
கணக்கு வைப்போம்





கடவுளின்
கண்களிலோ
உறக்கம்
மனிதர்களின்
கண்களிலோ
கண்ணீர்..!















நான் சிலகாலமே அனுபவித்த நெடுந்தீவின்
காவிய வாழ்வை முழுவதுமாக வாழக்
கொடுத்து வைத்தவர். சில வருடங்கள்
நான் படித்த நெடுந்தீவு மகா
வித்தியாலயத்திலும் படித்திருக்கிறார்.
என்னுடைய தோழர்களும்
தோழியர்களும் ஓடியும் பாடியும் கூடியும்
திரிந்த வீதிகளிலும் புல் வெளிகளிலும்
கடற்கரைகளிலும் தனது தோழர் தோழி
களுடன் என்னை விட அதிக காலம்
வாழ்ந்திருக்கிறார்.
நான் படிக்க விரும்பி வாய்க்காது போன
[illegible] பயில்கிறார்.
போரும் புலப்பெயர்வும் இடுக்கண்களும்
என்ற சூறாவளியில் அகப்பட்ட இலவம்
பஞ்சாக நம் வாழ்வு சிதறாமல்
இருந்திருந்தால் எப்போதோ முகிலனையும்
அவரது கவிதைகளையும் அறிந்திருப்பேன்.
சமூகத்தில் சாதிபேதங்கள் அழிந்த முதல்
ஊராக என் தீவு மாறவேண்டும் என்ற
கனவை நனவாக்கக் கூடிய கவிஞன்
நெடுந்தீவு - முகிலனின் தலைமுறையை
வாழ்த்துவது பாக்கியமாகும்...

கவிஞர் வ. ஐ. ச. ஜெயபாலன்
வன்னி

விலை : 200/=

ISBN : 978 - 955 - 8741 - 46 - 7

9789558741467

Gayathri Publication
P. O. Box : 64, Dehiwela.
+ 94 11 2727621, + 94 72 73 74 75 0